
Manimangalam Hydrographic
Survey - 22.09.2018


Thaiyur Lake - 24.09.2018


Manimangalam Topographic Survey - 22.09.2018


SRIPERBANDUR LAKE - 24.09.18
2018/9/24 12:33


Ayyapakkam Lake
Topographic Survey
04.10.2018




செய்தி வெளியீடு எண்.57/2018 நாள் 08.10.2018

சென்னைமாநகரின் நீர்ஆதாரங்களை விரிவாக்குவதற்காக நகரைசுற்றியுள்ள சிறிய ஏரிகள் மற்றும் கைவிடப்பட்ட குவாரிகளிலும் சென்னை குடிநீர் வாரியம் ஆய்வு

..........................................................................................................

தமிழக அரசின் உத்தரவின் படி சென்னை குடிநீர் வாரியம் மாநகர குடிநீர் வழங்கலுக்கான புதிய ஆதாரங்களை கண்டறிய, சென்னை சுற்றுவட்டார ஏரிகள் மற்றும் கைவிடப்பட்ட கல்குவாரிகளிலுருந்து நீர் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறியும் ஆய்வு மற்றும் செயல்திட்டம் உருவாக்கும் சிறப்பு குழு அமைத்து ஈடுபட்டுள்ளது. மாதவரம், ரெட்டேரி ஏரியில் சாத்தியகூறு ஆய்வுகளை சமீபத்தில் சென்னை குடிநீர் வாரியம் முடித்தது. ஏரியின் அருகில் நவீன தொழில் நுட்பத்திலான நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கான திட்டத்தையும் சமர்ப்பித்துள்ளது.

அதிகரிக்கும் நீர் ஆதார தேவைக்கான திட்டம் குறித்து அரசிடம் திட்ட அறிக்கை சமர்ப்பிப்பதன் பொருட்டு ஆய்வின் நோக்கம், திட்டம், ஆய்வை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை வரையறுக்க சென்னை குடிநீர் வாரியமானது அதன் மேலாண்மை இயக்குநர் திரு.அசோக் டோங்ரே இஆப., செயல் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர் இஆப., ஆகியோரின் கீழ் சிறப்புக் குழுவை உருவாக்கியுள்ளது. இந்தக்

குழு, பொதுப்பணித்துறையுடனும், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சென்னையில் உள்ள IIT போன்ற நிறுவனங்களுடனும் இணைந்து திட்டம் வகுக்கும் பணிகளை மேற்கொள்கிறது.

2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியின்போது புதிய நீர் ஆதாரங்களை ஆராய்ந்து கண்டறியும் நோக்கத்துடன் சிறப்புக் குழுவை சென்னை குடிநீர் வாரியம்அமைத்தது. சென்னை மற்றும்அதனை சுற்றியுள்ள ஏரிகள் மழை நீர் தேங்கியுள்ள கைவிடப்பட்டுள்ள குவாரிகள் மற்றும் நிலத்தடி நீர்ஆகியவற்றில் ஆய்வுகளை மேற்கொண்டது.

இதன்அடிபடையில் 2017 ஆம் ஆண்டில் புதிய தினசரி 40 இலட்சம் லிட்டர் திறன் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையமானது போரூர் ஏரியில் நிறுவப்பட்டது. போரூர் ஏரி நீர் பயன்பாட்டிற்குவந்தது. மேலும் சிக்கராயபுரம் குவாரிகளில் 4.5 கி.மீ நீளத்திற்கு 600MM dia குழாய்கள் பொருத்தப்பட்டன. அதன் மூலம் தினசரி 300 இலட்சம் லிட்டர்அளவில் நீர் எடுக்கப்பட்டு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. வறட்சியின்போது 4 லட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு இதன் மூலமாக பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டது. முகப்பேர், ஆலந்தூர், வளசரவாக்கம், போரூர், ராமபுரம், நந்தம்பாக்கம் மற்றும் அருகில் உள்ள பகுதிகள் இந்தத் திட்டத்தால் பயன்பெற்றன. இத்திட்டங்கள் மூன்று மாதங்களில் பணிகள் முடிக்கபட்டு பயன்பாட்டுக்கு வந்தன.

தற்சமயம் சென்னை குடிநீர் வாரியம் முதற்கட்டமாக உடனடியாக மாநகர நீர் வழங்கலுக்காக ஏரிகளைகயும் வேறு நீடித்த ஆதாரங்களை கண்டறிதலை மேற்கொண்டுள்ளது. பின்னர் எதிர்கால தேவைகளுக்கான நீர் ஆதாரங்களையும் கண்டறிய திட்டமிட்டுள்ளது

இந்தச் சிறப்புக் குழு சாத்தியப்பாடு ஆய்வுகளுக்காக கீழ்கண்ட முறைகளை பின்பற்றுகிறது

- தற்போதுள்ள கொள்ளளவு (நீரளவியல் ஆய்வு (Hydrography) மற்றும் நீரின்தரம்
- ஏற்கனவே மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள்
- நீர்மாசுக்கட்டுபாடு
- நீர் வழங்கும் கொள்திறன் மற்றும் கூடுதல் ஏற்பாடுகள்

- தற்போதைய பிற தேவைகள் மற்றும் உள்ளூர் மக்களின் எதிர்ப்புகளுக்கு வாய்ப்புள்ளதா என அறிதல்
- தற்போதுள்ள சுத்திகரிப்பு முறைகள் மற்றும் நீர்கொணறும் வசதிகளை பரிசீலித்தல்
- நீர் ஆதாரத்தின் அருகில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான நிலங்களை பரிசீலித்தல்.

நேரடியாகப் பார்வையிடுதல், பரிமாற்றத்திற்கான குழாய்களுக்கு ருகாமையில் உள்ள இடங்களைப் பார்வையிடுதல், களத்தில் விசாரித்தல் மற்றும் பொதுப்பணித்துறை, மத்திய நிலத்தடி நீர் ஆணையம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் கிங் பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்களுடன் ஆலோசனை செய்தல் போன்றவற்றின் மூலம் வளங்கள் கண்டறியப்பட்டன. தற்போது ஆய்வில் இருக்கும் ஏரிகள் மற்றும் கல்குவாரிகள் பின்வருமாறு:

**ஏரிகள்**

- போரூர் ஏரி
- ரெட்டேரி ஏரி (கொளத்தூர் அருகில்)
- மணிமங்கலம்
- அயனம்பாக்கம்
- திருநீர்மலை
- நேமம்
- அய்யப்பாக்கம்
- ஸ்ரீபெரும்புதூர்
- தென்னேரி
- தையூர்
- சிட்லபாக்கம்
- மாம்பாக்கம்
- அரசன் கழனி
- பெரும்பாக்கம்
- கொரட்டூர்

**கல்குவாரிகள்**

- சிக்கராயபுரம்
- எருமையூர்
- நன்மங்கலம்
- பம்மல், பல்லாவரம்
- திருநீர்மலை
- நல்லம்பாக்கம்

முடிக்கப்பட்ட விரிவாக்கப் பணிகள் :

போரூர் மற்றும் சிக்கராயபுரம் குவாரி பணி நிறைவின் அனுபவத்தின் படிமையப்படுதப்பட்ட நீர் வினியோக கட்டமைப்பின் கீழ் குடிநீர் வினியோக சிக்கல்களை தவிர்க்கலாம் எனவும் நீர் ஆதாரங்கள் மாசுபாட்டை குறைக்கவும் உதவும் எனவும் ஆய்வுகளில் கண்டறிந்துள்ளது

சென்னைகுடிநீர் வாரியத்தால் ரெட்டைஏரியில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு வருமாறு,

- நீரளவியல் ஆய்வின் அடிப்படையில் ஏரியின் மொத்த கொள்ளளவும் தற்போதைய கொள்ளளவும் மதிப்பீடு செய்யப்பட்டது
- சென்னை குடிநீர் வாரியம், கிங் ஆய்வு மையம், மற்றும் ஐஐடி மூலமாக நீரின் தரம் சோதனை செய்யப்பட்டது.
- மேலும் இப்பகுதியில் நிலத்தடி மண் மற்றும் நீரின் தரஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது
- வெள்ள வடிகால்கள் மற்றும் கழிவுநீர்வடிகால்கள் கண்டறியப்பட்டு சோதிக்கப்பட்டுள்ளன.
- ஏரியின் நீர் சுத்திகரிப்பு முறை குறித்து ஐஐடியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- ரெட்டேரி நீரை சுத்திகரித்து நுண்ணியிர் நீக்கம் செய்து பயன்படுத்தலாம் என ஆய்வு மற்றும் பலகட்ட பரிசோதனைகளின் முடிவில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
- மேற்கண்ட ஆய்வுகளின் அடிப்படையில் தினசரி 100 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் ரெட்டை ஏரியில் புதிய சுத்திகரிப்பு நிலையம் அமைக்க திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ரெட்டேரியில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான ஆய்வை அடுத்து இதர ஏரிகளிலும்  ஆய்வுகளை மேற்கொள்ள சென்னை குடிநீர் வாரியம் திட்டமிட்டுள்ளது. இந்த ஆய்வில், நீரின் கொள்ளளவை மதிப்பிடுதல், நீரின் தரத்தை ஆய்வு செய்தல் மற்றும் குழாய் பதிப்பிற்கேற்ற நில அளவை ஆய்வு ஆகியன மேற்கொள்ளப்படும்

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்